# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 240/பேரூ/2022**
**நாள் : 01.02.2023**

மு. தினேஷ்,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி. – எதிர் மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை போஸ்ட், சேணியர் வீதி, எண்.18 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு. தினேஷ் என்பவரது 25.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2022 அன்று பெறப்பட்டு 240/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை போஸ்ட், சேணியர் வீதி, எண்.18 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு. தினேஷ் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“மணலூர்பேட்டை பேரூராட்சியில் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான இடம் 67/2a மற்றும் 67/2C ஆகும்.

மணலூர்பேட்டை பேரூராட்சியில் புல எண்.70/8 உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் இரண்டு புளிய மரம் மற்றும் ஒரு இலுப்பை மரம் உள்ளது. இந்த மூன்று மரங்களின் கிளைகள் எங்கள் நிலத்தின் மேற்பகுதியில் பரந்து விரிந்து உள்ளதால் எங்களுடைய நிலத்தில் மகசூல் பாதிக்கப்படுகிறது.

பேரூராட்சி செயல் அலுவலர் நேரடியாக இடத்தை பார்வையிட்டு எங்கள் நிலத்தின் மேற்பகுதியில் வரும் மரக்கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கோருகிறேன்.

எங்களுடைய நிலத்தில் வரும் வருவாய்தான் எங்களுக்கு வாழ்வாதாரம் இந்த வருவாயைக் கொண்டு தான் பேரூராட்சி நிர்வாகத்திற்கு வரி செலுத்த வேண்டும். இந்த மனு மீது பேரூராட்சி செயல் அலுவலர் துரிதமாக செயல்பட்டு மரக்கிளைகளை விரைந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் 11.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் 30.12.2022 நாளிட்ட தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.70/8, (67/2C) க்கு அருகில் மனுதாரரின் தந்தை திரு. ப. முத்துக்கிருஷ்ணன் த/பெ. பங்காருசாமி என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு தற்காலிக மின் இணைப்பு பெறவேண்டி கடந்த 16.08.2022-ம் தேதியில் மின்வாரியத்திற்கு விண்ணப்பம் அளித்து அதன்பேரில் மதிப்பீடு அனுமதி பெற்று கடந்த 09.09.2022-ம் தேதியில் மின் இணைப்பு எண்.521 – 024 – 1216-ன்படி மின் இணைப்பு பெற்றுள்ளார்.

மின் இணைப்பு பெறுவதற்காக மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.70/8 (67/2C)ல் அரசுக்கு சொந்தமான இடத்தில் உள்ள புளியமரம் மற்றும் இலுப்பை மரத்தின் பரந்துவிரிந்திருந்த கிளைகளை புகார் மனுதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தன்னிச்சையாக எவ்வித அனுமதியும் பெறாமல் அவராகவே வெட்டி அப்புறப்படுத்தியுள்ளார் என்பதனை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி இடத்தில் உள்ள மரத்தை வெட்டிவிட்டதாக பொதுமக்கள் தெரிவித்ததை தொடர்ந்து நான் 21.09.2022-ல் நேரடியாக சென்று பார்த்தபோது மேற்படி மரத்தின் கிளைகளை இணைப்பில் கண்டுள்ள புகைப்படத்தில் உள்ளவாறு அகற்றிவிட்டு மின்இணைப்பு பெற்றுள்ளார். மனுதாரரின் தந்தையிடம் விசாரணை செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, மனுதாரர் மேற்காணும் மரக்கிளைகளை தன்னிச்சையாக வெட்டி அப்புறப்படுத்தியது குறித்து பின்னாளில் ஏதேனும் பிரச்சனைகள் வரக்கூடும் என்பதால் திரு.மு.தினேஷ் த/பெ. முத்துக்கிருஷ்ணன் என்பவரால் கண் துடைப்பிற்காக 23.09.2022-ம் தேதியில் ஒரு புகார் மனுவினை பேரூராட்சிக்கு அளித்துள்ளார். இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இவ்வலுவலகத்தின் மூலம் வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.392/2022, நாள்:18.10.2022ன்படி புகார் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, புகார் மனுதாரர் திரு. மு. தினேஷ் த/பெ. முத்துக்கிருஷ்ணன் என்பவர் பேரூராட்சி மற்றும் வருவாய் துறைக்கு எவ்வித தகவலும் அளிக்காமல் தன்னிச்சையாக மேற்காணும் அரசுக்கு சொந்தமான இடத்திலிருந்த மரக்கிளைகளை வெட்டிவிட்டு வேண்டுமென்றே அரசு மற்றும் அரசு அலுவலர்களை திசை திருப்பும் வகையில் ஒரு பொய்யான மற்றும் உண்மைக்கு புறம்பான புகார் மனுவினை

தங்களுக்கு அனுப்பியுள்ளார் என்பதனை இதன்மூலம் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 23.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

23.01.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்பேட்டை பேரூராட்சியில் எங்களுக்கு சொந்தமான நிலத்தின் அருகே பேரூராட்சிக்கு சொத்தமான புல எண் 70.8–ல் புளிய மரம் உள்ளது. மேற்கண்ட புளியமரத்தின் கிளைகள் பரந்து விரிந்து எங்களது நிலத்தின் மேல் படர்ந்துள்ளதால், மேற்கண்ட நிலத்திற்கு மின் இணைப்பு வசதி ஏற்படுத்த இயலவில்லை. எனவே மேற்கண்ட அரசுக்கு சொந்தமான புளிய மரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு மணலூர்பேட்டை பேரூராட்சியில் மனு அளித்திருந்தும், 3 மரத்தின் கிளைகளை அகற்றவில்லை. எனவே, எனது நிலத்திற்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கு ஏதுவாக எங்களது பட்டா இடத்திற்கு மேல் உள்ள புளிய மரத்தின் கிளைகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

23.01.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரரின் மனுவில் கண்டுள்ள இடம் மற்றும் அங்கு அமைந்துள்ள புளிய மரம் ஆகியவை 21.9.2022 அன்று என்னால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் நிலத்திற்கு அருகே மணலூர்பேட்டை பேரூராட்சிக்கு சொந்தமான புல எண். 70 (8)–ல் புளியமரம் உள்ளது. திரு. தினேஷ் மற்றும் அவரது தந்தை திரு. ப. முத்துகிருஷ்ணண் ஆகியோர் பேரூராட்சியிலிருந்தோ அல்லது வட்டாட்சியரிடமிருந்தோ எவ்வித முன் அனுமதியும் பெறாமல் தங்களது இடத்திற்கு மின் இணைப்பு பெரும்பொருட்டு தன்னிச்சையாக மேற்கண்ட புளியமரத்தின் கிளைகளை வெட்டியுள்ளனர். இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு வருவாய் கோட்டாட்சியருக்கு 18.10.2022 அன்று புகார் அளிக்கப்பட்டுள்ளது, என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் அரசுக்கு சொந்தமான இடத்தில் உள்ள புளிய மரத்தின் கிளைகளை தன்னிச்சையாக வெட்டிவிட்டு, 9.9.2022 அன்றே மின் இணைப்பு (எண் 521–024–1216) பெற்றுவிட்டு, மரத்தின் கிளைகளை அப்புறப்படுத்தியதால் பிரச்சனை எழ வாய்ப்புள்ளது எனக்கருதி மணலூர்பேட்டை பேரூராட்சிக்கு மரத்தின் கிளைகளை அகற்றிட 23.9.2022 அன்று மனு அளித்துள்ளார் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்பேட்டை பேரூராட்சியில் தனக்கு சொந்தமான நிலத்தின் அருகே பேரூராட்சிக்கு சொத்தமான புல எண் 70 (8)–ல் புளிய மரம் உள்ளது எனவும் மேற்கண்ட புளியமரத்தின் கிளைகள் பரந்து விரிந்து நிலத்தின் மேல் படர்ந்துள்ளதால், மேற்கண்ட நிலத்திற்கு மின் இணைப்பு வசதி ஏற்படுத்த இயலவில்லை எனவும், எனவே மேற்கண்ட அரசுக்கு சொந்தமான புளிய மரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு மணலூர்பேட்டை பேரூராட்சியில் மனு அளித்திருந்தும், 4 மரத்தின் கிளைகளை அகற்றவில்லை எனவும், எனவே, எனது நிலத்திற்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கு ஏதுவாக எங்களது பட்டா இடத்திற்கு மேல் உள்ள புளிய மரத்தின் கிளைகளை அகற்றிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மணலூர்பேட்டை பேரூராட்சியின் செயல் அலுவலர் மனுதாரரின் மனுவில் கண்டுள்ள இடம் மற்றும் அங்கு அமைந்துள்ள புளிய மரம் ஆகியவை 21.9.2022 அன்று நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது எனவும் மனுதாரரின் நிலத்திற்கு அருகே மணலூர்பேட்டை பேரூராட்சிக்கு சொத்தமான புல எண். 70.8–ல் புளியமரம் உள்ளது எனவும் புளிய மரத்தின் கிளைகளை திரு. தினேஷ் மற்றும் அவரது தந்தை திரு. முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேரூராட்சியிலிருந்தோ அல்லது வட்டாட்சியரிடமிருந்தோ எவ்வித முன் அனுமதியும் பெறாமல் மனுதாரர் இடத்திற்கு மின் இணைப்பு பெரும்பொருட்டு தன்னிச்சையாக மேற்கண்ட புளியமரத்தின் கிளைகளை வெட்டியுள்ளனர் எனவும் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு வருவாய் கோட்டாட்சியருக்கு 18.10.2022 அன்று புகார் அளிக்கப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் அரசுக்கு சொந்தமான இடத்தில் உள்ள புளிய மரத்தின் கிளைகளை தன்னிச்சையாக வெட்டிவிட்டு, 9.9.2022 அன்றே மின் இணைப்பு (எண் 521–024–1216) பெற்றுவிட்டு, மரத்தின் கிளைகளை அப்புறப்படுத்தியதால் பிரச்சனை எழ வாய்ப்புள்ளது எனக்கருதி மணலூர் பேட்டை பேரூராட்சிக்கு மரத்தின் கிளைகளை அகற்றிட 27.9.2022 அன்று பேரூராட்சிக்கு மனு அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

மனுதாரர் மணலூர்பேட்டை பேரூராட்சிக்கு சொந்தமான புல எண்.70(8)க்கு அருகில் மனுதாரரின் தந்தை ப. முத்துகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு தற்காலிக மின் இணைப்பு பெறுவதற்காக மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.70/8, (67/2C)ல் அரசுக்கு சொந்தமான இடத்தில் உள்ள புளியமரம் (ம) இலுப்பை மரத்தின் பரந்துவிரிந்திருந்த கிளைகளை மனுதாரர் (ம) அவர் குடும்பத்தினர் தன்னிச்சையாக எவ்வித அனுமதியும் பெறாமல் வெட்டி அப்புறப்படுத்தியுள்ளது செயல் அலுவலரின் அறிக்கையில் இருந்து தெளிவாகிறது. மனுதாரர் தன்னிச்சையாக மரக்கிளையை வெட்டி அப்புறப்படுத்தியதை தனது புகார் மனுவிலோ அல்லது தனது 23.1.2023 நாளிட்ட அறிக்கையிலோ இம்முறை மன்றத்திற்கு தெரிவிக்காததும் மேலும் உண்மைகளை மறைத்து தனக்கு சாதகமான கூற்றை மட்டும் இம்முறை மன்றத்திற்கு தெரிவித்துள்ளது கண்டிக்கத்தக்கதாகும்.

மேலும் மனுதாரர் மரக்கிளைகளை தன்னிச்சையாக வெட்டி அப்புறப்படுத்தியது குறித்து வருவாய் கோட்டாட்சியர் திருக்கோவிலூர் அவர்களுக்கு ந.க.எண்.392/2022 நாள்:18.10.2022ன்படி செயல் அலுவலரால் புகார் அளிக்கப்பட்டுள்ளது தெரியவருகின்றது. புகாரின் அடிப்படையில் மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்டு விசாரணையின் அடிப்படையில் உரிய சட்ட ரீதியான

நடவடிக்கைகளை மேற்கொள்ள வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

மேலும் மணலூர்பேட்டை பேரூராட்சியில் உள்ள மரங்கள் முறையாக பராமரிக்கப்படுவதையும் பேரூராட்சியில் உள்ள பழமையான மரங்களில் உள்ள அபாயகரமான கிளைகளை அகற்றிடவும் (Pruning) உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரங்களை பாதுகாத்திடவும் பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, பிப்ரவரி 1–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) மு. தினேஷ்,
த/பெ. முத்துகிருஷ்ணன்,
18, சேணியர் வீதி,
மணலூர்பேட்டை போஸ்ட்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2) செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
3) மாவட்ட ஆட்சித் தலைவர்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்,
கள்ளக்குறிச்சி.
4) வருவாய் கோட்டாட்சியர்,
திருக்கோவிலூர்.
5) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்ககம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
6) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

06/02/23

செயலாளர்.

6/2/23